தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

சனிக்கிழமை, 3 மே 1986,

சித்திரை 30. அட்சய, திருவள்ளுவராண்டு-2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

இராயபுரம் அருகே மேம்பாலம் கட்டுதல்.

* 219. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை-கல்கத்தா தேசிய நெஞ்சாலையில், இராயபுரம் அருகில் இராசாசி சாலையின் முடிவில், இருப்புப் பாதை குறுக்கிடும் இடத்தில், மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

(உ) இல்லை எனில், இனியாவது அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) தற்போது இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) வடக்குக் கடற்கரை சாலையில் (இராசாசி சாலை) இரண்டு இருப்புப் பாதையின் மேல் கட்ட உத்தேசித்திருந்த மேம்பாலத்தைத் தொழில் நுட்ப சிரமங்களுக்காகவும் மற்றும் அதிகப்படி செல்விட வேண்டியதின் காரணமாகவும், கைவிட முடிவு எடுக்கப்பட்டது. எனினும், இத்திட்டத்திற்குப் பதிலாக ராயபுரம் மன்னார்சாமி கோவில் சாலையிலுள்ள இருப்புப் பாதையின் மேலுள்ள மேம்பாலத்தின் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு இருவழித் தடங்கள் இருப்பதற்குப் பதிலாக நான்கு வழித் தடங்களாக அகலப்படுத்தும் திட்டம் பரிசீலனையிலுள்ளது.

[1986 மே 3

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, சென்னை-கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில், இராயபுரம் அருகில் இராசாசி சாலையின் முடிவில், இருப்புப் பாதை குறுக்கிடும் இடத்தில் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு 'தற்போது இல்லை' என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். 'தற்போது இல்லை' என்றால் பின்னாலே அது உருவாக்கப்படுமென்று பொருள் இருக்கிறது. அப்படி ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா? மக்களுடைய நன்மை குறித்து இப்போது அது இல்லாவிட்டாலும், எதிர்காலத்தில் அந்தச் செயற்குறிப்பை உருவாக்கி, தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, தற்போது இல்லை. ஏற்கெனவே இருந்தது என்று சொன்னேன். அந்தச் செயற்குறிப்பு இப்போது கிடையாது. பணப் பற்றாக்குறை காரணமாக அந்த இரண்டு இடங்களிலும் போகின்ற தண்டவாளங்களுக்கு மேலாகப் பாலம் போட அதிகப் பணம் செலவாகும் என்பதால், மன்னார்சாமி கோவில் சாலைக்குப் பக்கத்திலுள்ள இருப்புப்பாதையின் மேலுள்ள மேம்பாலத்தை அகலப்படுத்தலாமென்று அரசு பரிசிலிக்கிறது என்று சொன்னேன். அந்த வகையில் இது பரிசிலிக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, மன்னார்சாமி கோவில் சாலையிலுள்ள இருப்புப் பாதையின் மேலுள்ள மேம்பாலத்தை அகலப்படுத்துவது பரிசிலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பரிசிலனையை விரைவிலே முடித்து, அதை அகலப்படுத்தும் பணி தொடங்கப்படுமா? அதற்கு எந்த அளவுக்கு செலவிடலாமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது? அந்தப் பணி எப்போது தொடங்கும், எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக 5.60 கோடி ரூபாய் செலவாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதிலே பாதியை அரசும், பாதியை மாநகராட்சியும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டது. மாநகராட்சியில் நிதிப் பற்றாக்குறை காரணமாக, அரசே அதை மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்தச் செயற்குறிப்பு பரிசிலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு, ஆய்வு முடிந்த பிறகு, வேலை எடுத்துக்கொள்ளப்படும்.